# ஆபாசவியல் மற்றும் மெய்நிகர் பாலியல் — தேவன் கவனிக்கின்றாரா?



# ஆபாசவியல் மற்றும் மெய்நிகர் பாலியல் — தேவன் கவனிக்கின்றாரா?

***'தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.' – ரோமர் 1:28***

*இத்தகைய நயவஞ்சக முரண்பாட்டின் மத்தியில் நாம் ஒருபோதும் இருந்ததில்லை. ஒருபுறம், இன்றைய தொழில்நுட்பம், எந்த தகவலையும் அணுக முடியாமல் இருந்த பூட்டிய கதவினை திறந்து விட்டிருக்கிறது. அதாவது, இணைய இணைப்பு கொண்ட எவரும் இப்போது அறிவு, புரிந்துகொள்ளுதல் மற்றும் நல்வாழ்வைப் பற்றி அறியப்படாத பலவற்றினை அறிந்துக்கொள்ளலாம். மறுபுறம், அதே தொழில்நுட்பம் பொறுப்பற்ற துணிச்சலான இன்பநுகர்வின் கதவைத் திறக்க இவ்வுலகிற்கு வாய்ப்பளிக்கிறது. மேலும் அவை அழிவிற்கான காட்சிகள், ஒலிகள் மற்றும் செயல்பாட்டின் இருளான சக்திவாய்ந்த சுழல்காற்றில் நமது ஆர்வத்தை இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. ஒரு காலத்தில் மிகவும் புனிதமாக கருதப்பட்ட, பாலியல் ஒழுக்கமானது, இப்பொழுதோ முக்கியமான போக்காகவும், நமது கலாச்சாரத்தில் கொடிய கழலையாகவும் (tumor) மாறிவிட்டது. இக்கழலையானது "கருத்து சுதந்திரம்" என்னும் மாறுவேடத்தில் நமது மனிதத் தன்மையை அரித்துக்கொண்டிருக்கிறது. ஆபாசவியலும் (ஆபாசப்படமும்) – அதின் அனைத்து தரக்குறைவான உச்சகட்ட வெளிப்படையான செயல்களும் வன்முறைகளும் – தற்போது இணையத்தில் தேடுகின்ற பல்லாயிரக்கணக்கானோருக்கு மிகவும் பிரபலமான ஒற்றை இலக்காக மாறியுள்ளது. இது எண்ணற்றோரின் வாழ்க்கை மற்றும் உறவுகளை அழிக்க வழிவகுக்கும் இணையதள கண்ணியாகும். இதைக்குறித்து நாம் என்ன செய்யலாம்? நாம் என்ன செய்ய வேண்டும்? இந்த அவபக்தியான வலையில் நீங்கள் சிக்க நேர்ந்தால், அதிலிருந்து வெளிவர ஏதேனும் வழி இருக்கிறதா?*




*இந்த பாடத்தின் நுண்ணியல்பு காரணமாக, பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் துரிதமான காதுகளுக்கு இப்பாடம் ஏற்றதா என தகுந்த முடிவினை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

## அடிமைப்படுத்தல், ஆபாசவியல் அடிமைத்தனத்தைப் பற்றின அறிவியல், *AsapSCIENCE (social media channel)*

- *தேடுபொறி அனைத்திற்கும் வரும் கோரிக்கைகளில் சுமார் 25 சதவீதம் ஆபாசப்படத்திற்காக உள்ளது, மேலும், மக்கள் ஏன் இணையத்திற்கு செல்கின்றனர் என்பதற்கான நான்காம் மிகப்பெரிய பொதுவான காரணியாக இது அமைகிறது. காலப்போக்கில் ஆபாசவியலும் பரிணாம வளர்ச்சி அடைந்து, இறுதியாக நமது விருப்பம் மற்றும் அவாக்களை வடிவமைக்கின்றதாய் மாறியுள்ளது. அறிந்த உண்மையென்னவெனில், ஆபாசம் ஒரு போதைப்பொருள் போன்று பல வழிகளில் செயல்பட்டு மூளையில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்துகிறது. அதனோடு நீடித்த தொடர்பில் இருந்தால், அதற்கான நமது சகிப்புத்தன்மை அதிகரித்து, அதற்கு பலரும் நம்மில் அடிமையாய் கூட ஆகிவிடுகின்றோம். அது ஒரு பொருள் சார்ந்ததாய் இல்லாது போயினும், போதையைப்போல, பொதுவான கட்டுப்பாட்டை இழப்பதற்கு வழிவகுக்கிறது. அதிலிருந்து விடுப்பட விரும்பும்போது சூதாட்டம், வீட்டை விட்டு ஓடிவிடுதல் போன்ற எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்பதையும் தாண்டி அதையே மேலும் விரும்பி தேட கட்டாயப்படுத்தும். பிரச்சனை என்னவெனில், அதனோடு தொடர்ந்து தொடர்பில் இருக்கும்போது, மூளையில் உள்ள உபயோகப் படுத்தாத நரம்பணு கூழ்மங்கள் அனைத்தும் நெடுநாட்களுக்கோ அல்லது வாழ்நாள் முழுவதுமோ மாற்றியமைக்கப்படுகிறது.*

*இந்த விடயத்தில் நமது கண்ணோட்டம் கூர்மையற்றதாயுள்ளது: அனைத்து ஆபாசப்படங்களும் இணையதள பாலியல் சந்திப்புகள் (அ) விஷயங்களும் இழித்தன்மையுள்ள பாவங்களாகும்! இவ்வாறு கூறின பின்பு, அவற்றின் ஈர்ப்பு மற்றும் அடிமைப்படுத்தும் தன்மையின் காரணமாக, பலர் வாழ்க்கையை சீரழிக்கும் பழக்கங்களில் இழுக்கப்பட்டு அல்லது அதிலேயே சிக்கித் தவிக்கின்றார்கள் என்பதை நாம் உணர்கிறோம். அப்படிப்பட்ட சூழலில் நீங்களோ அல்லது தங்களுக்கு தெரிந்தவர்களோ இருந்தால், தயவுகூர்ந்து எங்களோடே இப்பாடத்தில் இணைந்திருங்கள். ஏனெனில், அப்படிப்பட்ட பாவத்தில் இருந்து வெளியேறுவதற்கான ஒரு ஊக்கத்தையும் வழிவகைகளையும் வழங்குவதாய் இப்பாடத்தினை அமைக்க முயற்சித்துள்ளோம்.*




***2 தீமோத்தேயு 3:1-2: 'மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும் ...'***

*இன்று நமக்கு அணுக கிட்டிய இவ்வாறான அனைத்து விஷயங்களும் நிஜமாகவே கிடைக்கப்பெற்றிருப்போமா என்று அப்போஸ்தலர் கற்பனை கூட செய்து பார்த்திருக்க மாட்டார்! இணையதள பாலியல் தொழில் ஒரு மயக்கும் வகையில் உங்களிடத்திலிருந்து பலவற்றை எடுத்துக்கொண்டிருக்கிறது.*

## டோபமைன், ஆபாசவியல் அடிமைத்தனத்தைப் பற்றின அறிவியல், *AsapSCIENCE (social media channel)*

- *வாழ்க்கையைக் காப்பற்றிக்கொள்வதற்காக உண்ணும்போதோ அல்லது எதிர்கால சந்ததியை உருவாக்க உறவில் ஈடுபடும்போதோ, இப்படியாக ஏதாவது ஒன்றை சாதிக்கும்போதெல்லாம் வெகுமதிபோன்று டோபமைன் சுரக்கிறது. மேலும் இந்த டோபமைனானது, எதிர்காலத்தில் அதே*




செயல்களை செய்ய நம்மை தூண்டுவதற்காக, நரம்பியல் இணைப்புகளை ஒருங்கிணைக்கின்றது. வேறுவகையில் கூறவேண்டுமென்றால், சில செயல்களை செய்ய தூண்டுவதற்காக இவைகள் நமது மூளையின் உயிரணுக்களை மாற்றி உருவாக்குகின்றன. இவைகள் மீண்டும் நமது மூளையை மாற்றியமைக்கின்றன. நேஷனல் இன்ஸ்டிடியூட்ஸ் ஆப் ஹெல்த், போதைபொருளின் அடிமைப்படுத்தும் தன்மையை எலிகளின் மூலம் பரிசோதித்தனர். ஒரு போதைபொருள் கிடைக்க அந்த எலியானது ஒரு பொத்தானை அமுக்க பயிற்றுவிக்கப்பட்டிருந்தது. அது கிடைக்க எவ்வளவு கடினமாய் வேலை செய்கிறதோ அதுவே அந்த பொருளின் வீரியத்தைக் (அடிமைப்படுத்தும் தன்மை) குறிக்கிறது. நடந்தது என்னவென்றால், அதிக வீரியம் கொண்ட பொருள், அதிக டோபமைனை சுரக்கச் செய்தது. புணரும் இன்பத்தின் போது டோபமைன் வெளியிடப்படும் என்பது நமக்குத் தெரியும். இதை தான் ஆபாசவியலும் சரியாக பயன்படுத்திக்கொள்கிறது. எவ்வளவு நேரம் நீங்கள் அதில் நேரத்தை செலவழிக்கிறீர்களோ, அவ்வளவு டோபமைன் வெளியிடப்படும். இது அப்பழக்கத்தை வலுப்படுத்தி, நம்மை எதிர்காலத்தில் அதை நாடச்செய்வதொடு மாத்திரமல்லாமல் நமக்கு அது தேவை என்றாக்கிவிடும். கணினியில் இருந்து விலகி இருக்கும்போது அல்லது புணர்ச்சியின் போது நீங்கள் இந்த படங்களைக் கற்பனை செய்ய ஆரம்பிக்கும்போது, அவைகள் மேலும் வலுவூட்டப்படுகின்றன.



***2 தீமோத்தேயு 3:3-13: (NASB) 'சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு....'***

*இந்த தீர்க்கதரிசன சுபாவங்கள் பலவும் இன்றைய இணையதள பாலியல் தொழிலுக்கே பொருந்தும்!*

### அடிமைத்தனம் மற்றும் நிலைத்திருத்தல், தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அரிஸ்டாட்டில் என்பவர், மனிதர்கள் அடிமைகளாக இருக்க இயல்பாகவே பிறந்தவர்கள் என நம்பினார். அவர் வாழ்ந்த காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு அடிமையாவது இருந்தனர். அவர் நடைமுறை நிலைமையை ஏற்றுக்கொண்டார். ஆனால், இன்று நாமோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றும், வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, 27 மில்லியன் அடிமைகள் உலகில் இருக்கிறார்கள், அவர்களில் 80 சதவீதத்தினர் பாலியல் வன்கொடுமைக்கும் சுரண்டலுக்கும் ஆளாகின்றனர். பாலியலுக்காக கடத்தல் தான் இன்று உலகிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் வெளிப்படையான தொழில் ஆகும். இன்று நாம் இதின் பயங்கரத்தைப் பற்றி பார்க்கபோவதில்லை. மாறாக அதில் நிலைத்திருத்தலைப் பற்றி பார்க்கபோகிறோம்.*

***வசனம் 6: 'பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு,'***

***வசனம் 7: 'எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய [இணையதள ஆபாசவியல் பொறுத்தவரையில் ஆண்களும் கூட ] வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.'***

*அறியாமையும், ஆழமான தீய செயல்களும், கருத்து சுதந்திரத்திற்கான கூக்குரலின் மத்தியில் மறைந்து போய்விடுகின்றன.*

## பாலியல் என்பது சட்டப்பூர்வமாக உள்ளது, தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *எங்கள் நாட்டில் புணருதல் என்பது சட்டத்திற்கு உட்பட்டதாக உள்ளது. சட்டவிரோதமான கற்பழிப்பு, சட்டரீதியான கற்பழிப்பு மற்றும் குழந்தையைப் புணரும் இச்சை ஆகியவை உள்ளன. புணருதல் மூலமாய் குழந்தைப்பேறு அடைந்தால், அதை நாம் 'குழந்தை வளர்ப்பு' என்கிறோம், மேலும் சட்டத்திற்கு உட்பட்டு 18 ஆண்டுகள் அதைப் பாதுகாக்க வேண்டும். புணருதல் குணப்படுத்த முடியாத நோயை உண்டாக்குமானால், சட்டரீதியாக நமது துணைக்கு அதைப்பற்றி தெரியப்படுத்த என்றென்றைக்கும் கடமைப்பட்டுள்ளோம். புணருதல் என்பதனுடைய உடல், உளவியல் மற்றும் உறவுசார் விளைவுகளினால், அது சட்டப்பூர்வமான குறிப்பிடத்தக்க செயலாக கருதப்படுகிறது. மேலும் இதுவரையிலும், சட்டமும் சீரானதாய் தான் இருந்திருக்கிறது அல்லவா? புணருதல் என்பது அதின் மூலமாய் வரக்கூடிய அபாயங்கள் மற்றும் பொறுப்புகளை புரிந்துகொள்ளும் இரண்டு வயது வந்தோருக்கு இடையே ஏற்பட வேண்டிய ஒன்று. அப்போது, பணம் சம்பந்தப்பட்ட பாலியல் என்பது சரியானதா? பணத்திற்காக பாலியலுக்கு வற்புறுத்துவது 'வணிக ரீதியான பாலியல் கடத்தல்' என்றழைக்கிறோம், அது சட்டவிரோதமானது. பணத்திற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட பாலியல் - 'விபச்சாரம்' ஆகும், அது இன்றும் எங்கள் நாட்டில் நெவாடாவில் உள்ள இரண்டு மாவட்டங்கள் தவிர்த்து அனைத்திடத்திலும் சட்ட விரோதமானது தான். ஆதலால், பாலியலுக்காக பண பரிமாற்றம் நடந்து, அதை படமெடுத்து இணையத்தில் பதிவேற்றாத வரைக்கும் ஒரு குற்றமாகத்தான் கருதப்படும்.*

***'[10] நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், [11] ... துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய் ... [12] அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். [13] பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.'***

*இந்த வன்கொடுமையான காரியங்களுக்கு எதிரான நமது நிலைப்பாட்டைப் பற்றின நமது எதிர்பார்ப்புகள் அனைத்தும் கேலிக்கும் நகைப்புக்கும் உள்ளாகும், ஆனால் நாம் இந்த நிலைப்பாட்டினை எடுத்தே ஆக வேண்டும்!*

## முதலாம் செயல் நிலை: பாலியல் தொழிலின் முற்றிலும் சீரழிந்த நிலையையும் நோக்கத்தையும் உணர்ந்து ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

***இணையதள பாலியல் வியாபாரமானது பல மனிதர்களை காயப்படுத்துகிறது. யார் அவர்கள்?***

***'மற்றவர் தங்களிடத்தில் எதிர்பார்க்கிறதை விட உன்னதமான மதிப்பீட்டிற்கு தாங்கள் தான் பொறுப்பு என்று கருதுங்கள். தங்களுக்கே தாங்கள் மன்னிப்பை வழங்காதீர்கள். தங்கள் மேல் அனுதாபம் கொள்ளாதீர்கள். உங்களிடத்தில் கடினமான எஜமானாகவும் – மற்றவர்களிடத்தில் கனிவானவராயும் இருங்கள்.'***

***- ஹென்றி வார்ட் ப்பீச்சர்***



*ஆரோக்கியம் மற்றும் வலுவாய் இருப்பதை பற்றி தாங்கள் அறிந்து கொண்டால் தான், காயம் என்றால் என்னவென்று தங்களால் தெரிந்துக்கொள்ள முடியும்:*

**ரோமர் 1:16 – 19: '[16]கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.[17]விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.[18]சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.[19]தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.'**

*தேவன், அவரின் வார்த்தை, அவரின் குணங்கள் மற்றும் அவருடைய திட்டம் போன்ற நற்காரியங்களுக்காய், விசுவாசத்தில் நாம் நிலைக்க வேண்டும். ஆபாசவியல் என்னும் கண்ணியில் சிக்குவதினால் தேவன் நம்மை கொன்றுவிடுவார் என்று பொருள் அல்ல. மாறாக கிறிஸ்துவர்களாய் உன்னதமான நிலைக்கு நிற்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. இது 'நன்மை' (அ) 'நல்லது' (அ) 'தார்மீகம்' என்பதை சார்ந்தது அல்ல, ஏனென்றால், நன்மை என்பது சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு வேறுபடும்.*

*சாதாரண ஆபாச பயன்பாடு சரியானதா? அதில் என்ன தவறு உள்ளது? அதென்னவெனில், மிக இயல்பாக, என்றைக்காவது ஒருநாள், நீங்கள் தேவபக்தியாய் இருக்க வேண்டாம் என தெரிந்தெடுப்பது ஆகும். அந்த ஒரு சில நிமிடங்கள், தேவன் ஒரு பொருட்டாக இருக்க மாட்டார், மேலும், தேவன் கூறினதற்கு எதிராய் தாங்கள் நிற்பீர்கள். நாம் அவ்வழியாய் செல்ல விரும்புகிறோமா?*

## பாலியல் அடிமைத்தனத்தை ஆதரிப்பது, தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *இதை நாம் 'வன்மையான ஆபாசவியல்' என்றழைக்கிறோம். மேலும் இது சட்டப்பூர்வமானதாய் மாத்திரம் அல்லாமல், கருத்து சுதந்தரத்தின் வெளிப்பாடு என பாதுகாப்பளிக்கப்படுகிறது. ஆனால் நாமோ அதைக் கொண்டாடி, வளர்நிலைச் சடங்காவும், பொழுதுபோக்குச் சார்ந்த சாக்குப்போக்காகவும் திருமணஞ்சார்ந்த துண்டுதலாகவும் இதை ஊக்குவிக்கிறோம். ஆனால், இன்றும் மக்கள், உடல், உளவியல் மற்றும் உறவுசார் விளைவுகளை உள்ளடக்கிய, சட்டத்திற்குட்பட்ட குறிப்பிடத்தக்க செயலான பாலியலுக்காக பணம் ஊதியமாக கிடைக்கப்பெறுகின்றனர். இப்படியாக, பணம் செலுத்தும் நுகர்வோரின் இன்பத்தை மனிதர்கள் வியாபாரமாக்கி ஆண்டிற்கு தோராயமாக 14 பில்லியன் டாலர்ஸ் பணம் சம்பாதிக்கின்றனர். பிரதான நேரத்திலிருந்து இரவு வரைக்கும், நமது பிரபலமான கலாச்சாரம் ஆபாசப்படப் பயன்பாட்டின் நிதர்சனத்தை கவலையில்லாமல் ஏற்றுக்கொள்கிறது. அதேசமயத்தில், பாலியல் கடத்தலுக்கு எதிரான பொதுமக்களின் கூக்குரலோடு இணைந்து குரல் கொடுக்கிறது. ஆனால் புகையிலை நிறுவனங்கள் பல தசாப்தங்களாக புற்றுநோயுடனான எல்லா தொடர்பையும் எப்படி மறுத்தார்கள் என்பது நினைவுக்கு வருகிறதா?? எப்படி புகையிலை நிச்சயமாக புற்றுநோயை உண்டாக்குமோ, அதேபோல், இந்த ஆபாசப்பட தொழிலும், பாலியல் அடிமைகள் வேண்டும் என்கிற தேவையை உருவாக்கவும் செய்கிறது பூர்த்தியும் செய்கிறது.*

### ➢ *புள்ளிவிவரங்கள்:*

*93.2% சிறுவர்களும் 62.1% சிறுமிகளும் தங்களது 18 அகவைக்கு முன்பே இணையதளத்தில் ஆபாசப்படங்களை பார்த்துவிடுகின்றனர்.*
*(ஆதாரம்: http://www.familysafemedia.com/pornography_statistics)*

*32% பதின் வகுப்பார் இணையத்தில் நிர்வாண அல்லது ஆபாச உள்ளடக்கத்தை நெஞ்சறியப் பார்ப்பதாக ஒப்புக்கொள்கிறார்கள். இதில் 43% பேர்கள் வாராந்திர அடிப்படையில் இவ்வாறாக*

*செய்கின்றனர். (ஆதாரம்:* TruResearch (2012) *Covenant Eyes 2015 Pornography Statistics* http://www.covenanteyes.com/lemonade/wp-content/uploads/2013/02/2015-porn-stats-covenanteyes.pdf*)*

*ஆபாசப்படம் பாலியல் அடிமைத்தனத்தை சாத்தியமாக்குகிறது, பலருக்கு லாபம் மற்றும் மதிப்புமிக்கதாக்குகிறது. இதை நாம் நமது இன்பத்திற்காய் பயன்படுத்த போகிறோமா? இதனால் யார் துன்புறுகின்றனர்? தொழிலில் இருக்கும் நபர்கள் இதில் ஒப்புதலோடு தான் ஈடுபடுகின்றனரா! சிறிதளவேனும் தாங்கள் பாலியல் அடிமைத்தனத்தை ஆதரிக்க எண்ணுகிறீர்களா?*

***ரோமர் 1:20 – 25: '[20]எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. [21]அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. [22]அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, [23]அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். [24]இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். [25]தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.'***

*நாம் எண்ணுவது போல், ஆபாசம் என்பது கடவுளுடைய சித்தத்திற்கும் வழிக்கும் முரணாக இருக்கிறது.*

*நமது உரையாடலுக்காக தேவனின் சத்தியம் என்ன சொல்கிறது என்று சுருக்கமாக பார்ப்போம்: மனித சிற்றின்பம் சரியான இடத்தில் தனிப்பட்ட விஷயமாக இருப்பதற்கு பதிலாக மோசமான வழியில் மோசமான உலகிற்கு வழங்கப்பட்ட மனிதனுடைய அடிப்படை இச்சையாய் மாறியுள்ளது.*

*மனித சிற்றின்பம் சரியான இடத்தில் தனிப்பட்ட விஷயமாக இருப்பதில் தவறல்ல – தேவன் அவ்வாறே அதை வடிவமைத்துள்ளார். எப்பொழுது புனிதமானது அதின் சரியான நிலையில் இருந்து எடுக்கப்படுகிறதோ அது மாசடைந்து மேலும் சில காரணங்களால் கவர்ச்சிகரமானதாயும் மாறுகிறது.*

## தீவிர வன்முறை, தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *பல்வேறு வகையான அதி தீவிர வன்முறைகளுக்கான தேவைகளும் அதிகரித்துக்கொண்டே தான் உள்ளது. 2005 மற்றும் 2010 – ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட இரண்டு ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிப்பது என்னவென்றால்: மிகவும் பிரபலமாக தரவிறக்கம் செய்யப்படும் ஆபாசப்படங்களில், பெண்களுக்கு எதிராகத் தான் பலவிதமான உடல்ரீதியான மொழிரீதியான தாக்குதல் மற்றும் வன்முறைகள் இடம்பெறுகின்றன, அதையும் அப்பெண் சுகமாய் ஏற்றுக்கொள்வது போல் பாவனையைத் தருகிறார். இன்னும் மோசம் என்னவெனில், 2010 இல் கூகிள் தேடலில் 'கற்பழிப்பு ஆபாசப்படம்' என்னும் பதத்திற்கு வந்த முடிவுகளில், 86 சதவீதம், 18 வயதிற்குட்பட்ட சிறுமிகளை உண்மையாய் கற்பழிப்பதைப் பற்றியும், 75 சதவீதம் ஆயுதங்கள் உள்ளடக்கியும், 43 சதவீதம் போதையான பெண்களை நிஜமாய் காட்டும் வண்ணமாயும், 46 சதவீதம் முறையற்ற உறவினை பற்றியதாயும் இருந்தது.*

*இதனால் யார் பாதிக்கப்படுகின்றனர்? இத்தகைய சீரழிவை அணுகுவோரின் கணவனோ/மனைவியோ/குடும்பமோ தான்.*

### ➢ *புள்ளிவிவரங்கள்:*

*ஒவ்வொரு வருடமும், சட்டவிரோத வர்த்தக பாலியல் சந்தையின் ஒரு பகுதியாக, சுயநலத்திற்காக பயன்படுத்தபடும் 1.8 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளில், சுமார் 100,000 அமெரிக்க குழந்தைகள் கடத்தலுக்கு இரையானவர்கள் என்று ஐ.நா மதிப்பிட்டுள்ளது. (ஆதாரம்: Source: June*

*6, 2014, The Internet Pornography Pandemic: The Largest Unregulated Social Experiment in History, Donna Rice Hughes;* http://enough.org/objects/christian-apologetics-journal-spring2014.pdf*)*

*இணையத்தில் பகிரப்படும் தகவல்களில் 30% ஆபாசம் சார்ந்தது. (ஆதாரம்:* http://www.huffingtonpost.com/2013/05/03/internet-porn-stats_n_3187682.html*)*

***ரோமர் 1:26 – 27: '*** **[26] இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; [27]... அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.'**

*டைம் பத்திரிகையின் படி (ஏப்ரல் 11, 2016, பார்ன் அண்ட் தி திரெட் டு விரிலிட்டி), சில ஆண்கள், இளைஞர்களாக ஆபாசம் நிறைந்த வாழ்க்கையில் வாழ்ந்த பிறகு படுக்கையறையில் சிக்கலை உணர்கின்றனர், மேலும், மிக நெருக்கமான தருணங்களில் ஆபாச நட்சத்திரங்களைப் போல செயல்பட அழுத்தத்தை சில பெண்கள் உணர்கின்றனர்.*

*ஆபாசத்தொழிலின் விளைவாய் வரும் மனஅழுத்தம் மற்றும் காயம் வெளிப்படுத்த முடியாத அளவிற்கு ஆழமாய் இருக்கிறது.*

## அவமானம் சாதாரணமாய் தோன்றும், தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *Fightthenewdrug.org இணையதளம் கூறுவது என்னவெனில், ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான மக்களால் பார்க்கப்படும் ஆபாசப்படங்கள், அவமானமும் வன்முறையும் பாலியலில் இயல்பான அங்கங்கள் என போதிக்கிறது. ஆய்வுகள் கூறுவது என்னவெனில், ஓர் செயல் எந்தளவுக்கு சமூக இயல்பு என ஒருவர் நம்புகிறாரோ, அவர்கள் அதை செயல்படுத்த அதிக வாய்ப்பிருக்கிறது. இந்த மாதிரி தவறான நெறிமுறைகளை உடைய பாலியல் ஆதிக்கத்திலும், வக்கிரத்திலும், தவிர்க்க முடியாத பாலியல் இனவாதத்திலும் செயல்பட கட்டாயப்படுத்தப்பட்ட ஓர் இளைய சமுதாயத்தினை வளர்த்திக்கொண்டு வருகிறோம். ஆபாசம் என்பது பார்வையாளர்களிடம் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தாங்கள் நிஜத்திலும் செய்ய துணியாத நடத்தைகளில் ஈடுபடுத்துகிறது. ஆனால், பல முறை அதைப் பார்க்கும்போது, ஒரு காலத்தில் அதிர்ச்சியளித்த விஷயம் இப்போது சாதாரணமானதாக மாறி அதற்கு தேவைகளும் அதிகரிக்க செய்கிறது. எவர் ஒருவர் தொடர்ந்து ஆபாசப்படம் பார்க்கிறாரோ அவர் பணம் கொடுத்து பாலியலில் ஈடுபடுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எந்தவொரு பொருளானாலும், குறைந்த விலையென்றால், லாபம் அதிகமாகும், இது மிக எளிதில் விழுபவரின் மீதான தவிர்க்க முடியாத சுரண்டலுக்கு வழிவகுக்கும். உண்மையில், பாலியல் கடத்தலில் இருந்து மீட்கப்பட்டவர்களில் 80 %, தங்களிடத்தில் வருபவர்கள் ஆபாசப்படத்தில் வருவதுப்போல் செய்துகாட்ட சொல்கின்றனர் என்று கூறுகின்றனர்.*

*இதனால் யார் பாதிக்கப்படுகின்றனர்? அத்தகைய பாவத்தில் ஈடுபடுவோரின் எவ்வகையான தொடர்பு கொண்ட அனைவருமே தவிர்க்க முடியாதபடிக்கு பாதிக்கப்படுகின்றனர். 56 சதவீத விவாகரத்திற்கு ஆபாசவியல் தான் காரணமாக கருதப்படுகிறது.*

### ➢ புள்ளிவிவரங்கள்:

*ஆபாசப்படங்களைக் கண்ட தம்பதிகள் பற்றின ஓக்லஹோமா பல்கலைகழகத்தின் ஆய்வு வெளிப்படுத்துவது என்னவெனில்:*

*ஆபாசப்படங்களைக் கண்ட தம்பதிகள் விவாகரத்து நீதிமன்றத்துக்கு செல்லும் அவர்களது வாய்ப்பினை விட இரண்டு மடங்காக – அதாவது அந்த ஆபத்தினை கிட்டத்தட்ட 200 சதவிகிதமாக அதிகரித்துள்ளனர்.*

*33 சதவிகித பெண்கள் குறைந்த பட்சம் வாரத்திற்கு ஒரு முறையாவது ஆபாசப்படமோ அல்லது வெளிப்படையான படங்களையோ பார்க்கின்றனர்.*

*தங்களது துவக்க கால பேட்டியில், தங்கள் திருமண வாழ்வு மிகவும் சந்தோஷமாய் உள்ளது எனவும் 3 சதவீதமே விவாகரத்துக்கு வாய்ப்பிருக்கிறது என கருதப்பட்ட தம்பதிகள், அவர்கள் ஆபாசப்படம் பார்ப்பவர்களாய் இருந்தார்களானால், தொடர் மதிப்பாய்வின் முடிவில் 12 சதவீதமாக அவர்களின் விவாகரத்தின் வாய்ப்பு அதிகரித்தது.*

*ஆபாசப்படத்தை பார்ப்பதை விட்டுவிட்ட மனைவிகளின் விவாகரத்தின் அபாய விகிதம் 6 சதவீதம் குறைந்தது. ஆபாசப்படத்தைப் பார்ப்பதை தொடர்ந்த மனைவிகளின் விவாகரத்தின் அபாய விகிதம் அதிகப்படியாக 18 சதவீதமாக உயர்ந்தது. ஆச்சரியம் என்னவெனில், ஆபாசத்தைப் பார்க்காத கணவன்மார்களின், விவாகரத்து அபாய விகிதத்தில் எந்த ஒரு விளைவையும் உண்டுபண்ணவில்லை. (ஆதாரம்: Porn-Watching by Married Couples Jacks Divorce Risk Rate up Nearly 200 Percent, Inquisitr August 21, 2016)*

***ரோமர் 1:28-32 : '28 தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். 29 அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், 30 புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப்பிணைக்கிறவர்களுமாய் பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், 31 உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். 32 இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.'***

தெய்வீக வழிகளை ஒதுக்கி வைப்பது, எப்போதுமே ஒரு துன்பகரமான மற்றும் அழிவுகரமான முடிவுக்கு இட்டுச்செல்லும். அதின் முடிவு என்ன என்பது எளிதில் கணிக்க கூடிய ஒன்று. சில நேரங்களில் இத்தகைய விஷயங்களில் நாமும் இழுப்புண்டு போய்விடுகிறோம் – அடுத்து நாம் என்ன செய்யலாம்?

## இரண்டாம் செயல் நிலை: உங்கள் தவறான பாலியல் பழக்கவழக்கங்களால் உங்களுக்கு தெரியாத மக்களுக்கு (நீங்கள் நெஞ்சார நேசித்து அன்பு செலுத்துபவர்கள் உட்பட) நீங்கள் பகிர்ந்தளிக்கும் காயம் மற்றும் அழிவின் ஆழத்தை ஒப்புக் கொள்ளுங்கள்.



பாதிப்படைந்த அனைவரையும் பாருங்கள்! இதற்கு நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நான் இத்தகைய தேவபக்தியற்ற ஆசாபாசங்களில் என்னை திருப்திப்படுத்துவேனேயாகில், எனக்கு வரும் சாத்தியமான விளைவுகள் யாவன?

**'ஆனபோதிலும், தன்னலமின்மை மற்றும் சுய ஒழுக்கம், ஒரு நல்ல வீரனின் சிறப்பான குணங்களாக அங்கீகரிக்கப்படும்' - வில்லியம் லியோன் மெக்கன்சி கிங்**

"ஜாய்புல் அண்ட் ட்ரயம்பண்ட்" கூறுகிறது: சிறிது மாற்றியமைக்கப்பட்ட ஒரு சொலவடை என்னவெனில்: கிறிஸ்து மூலமாய் தேவன் நம்மை நேசித்து நாம் இருக்கும் வண்ணமாகவே நம்மிடத்தில் இடைப்படுகிறார், ஆனால் நம்மை அவ்வாறாகவே விட்டுவிடாத அளவிற்கு நம்மை அவர் நேசிக்கிறார். ***1 யோவான் 1:9: 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.'*** பேதுரு

*செய்தது போல நாமும் அவரை ஏமாற்றமடையச் செய்கிறோம், பிறகு, "**இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?**" என்னும் கேள்விக்கு நமது இருதயங்களில் பதில் தேடிக் கொண்டிருக்கிறோம். **யோவான் 21:15-19** - **இவர்களிலும்** - உனது உலக இச்சைகள் மற்றும் அழிவுள்ள பொழுதுபோக்குகள் விடவும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? வலி மற்றும் ஏமாற்றத்தை கையாளும் உனது பழைய பழக்கவழக்க வழிகளை விடவும் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? உன்னை சிறைப்படுத்தும் எவ்வகையான பாவங்களை விடவும் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? அவை எல்லாவற்றையும் மனப்பூர்வமாய் விட்டுவிட்டு என்னை பின்பற்றி வரும் அளவிற்கு நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? நம்மை விடுதலையாக்கி அநீதியான அனைத்திலிருந்தும் நம்மை சுத்திகரிக்க நமது தேவனும் நமது கர்த்தராகிய இயேசுவும் ஆவலோடு காத்திருக்கின்றனர். நமது மனிதத்தன்மையை நினைவில் கொள்வோமாக, அப்படியென்றால், பாதிப்புக்கு ஆளாகும் நமது நிலையை நினைவில் கொள்வோமாக!*

## உடல் ரீதியான மனநிறைவு அடையாமை, தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *ஒரு உண்மையான நபருடன் ஒரு ஆற்றல்மிக்க, பல் அடுக்கான, எப்போதும் மாறுகின்ற புணருதலில் ஈடுபடுத்துவதற்கு பதிலாக, பெரும்பாலான ஆபாசவியலானது, முக்கியமாக ஆணின் பாலியல் உணர்வைத் தூண்டக்கூடிய செயலாகத்தான் சித்தரிக்கப்படுகிறது. இது திருப்திகரமற்றதை நிரூபிக்கிறது. நேரடி செயலார்த்தமான ஆபாசவியலை பயன்படுத்துவோரின் அடிமைப்படுத்தும் தன்மையானது, முக்கியமாக வளரும் சிந்தையில் தாக்கத்தை உண்டாக்கும் கோகெயினுக்கு இணையாக இருக்கிறது. நுகர்வோருக்கு அதே அளவு திருப்தி கிடைப்பதற்காக தீவிரமான மற்றும் மாறுபட்ட வடிவங்களில் ஆபாசப்படங்கள் தேவைப்படுகின்றன. இதினால் அவர்களின் கல்வி வேலை மற்றும் உறவுகளை ஆபத்திற்கு உட்படுத்தி, அதிக வன்முறை மற்றும் இளைய வயதினர்கள் உட்படுத்தப்பட்ட நாவல் காட்சிகளை வலுக்கட்டாயமாக தேட ஆரம்பிக்கின்றனர். 2015 இல், 'ஆபாசப்படம்' என்பதோடு அதிகமாய் பொதுவாக தேடப்பட்ட தேடல் வார்த்தை 'பதின்' ஆகும். மேலும் குழந்தை ஆபாசப்படங்களுக்கு ஒவ்வொரு நாளும் வருகின்ற 116,000 க்கும் அதிகமான தேடல்களுக்கு அதிக இளைஞர்கள் பலியாள் ஆகிவிடுகின்றனர். குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்திற்காக கைதுசெய்யப்பட்ட 80 சதவீத ஆண்கள் சிறுவர்களை வைத்து ஆபாசப்படம் செய்துள்ளனர், அதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள்.*

***லூக்கா 9:23-25: (NASB) : '*** [23] **பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.**
[24] **தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்.** [25] **மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத் தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?'**

***தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு*** *– இயல்பாகவே கிறிஸ்துவம் என்பது தேர்ந்தெடுத்தல் மற்றும் செயல்படுத்தல் சார்ந்ததாய் உள்ளது. நமக்கு, ஆவிக்குரிய ஜீவியத்தை தேர்ந்தெடுப்பது என்பது நமது உலகப்பிரகாரமான வாழ்க்கையை புறந்தள்ள செயல்படுவதாகும். இது தினமும் விரிவடைய வேண்டிய ஒரு செயல்முறை ஆகும்.*

## உணர்வாக்கம் *(Sensitization)*, ஆபாசவியலில் நமது மூளை – ஆபாசவியலின் பயமுறுத்தும் விளைவுகள், டாக்டர்ஸ்காட்ஹெல்த், *yourbrainonporn.com*

- *… உணர்வாக்கம், அதென்னவெனில், தூண்டல் மூலமாய் உண்மையில் உணர்வேற்றம் அடைவதாகும். உயர்வேக இணையத்துடன் ஆபாசப்படத்திற்கு தொடர்பு கிடைக்கும்போது, எந்தவொரு நுண்ணிய விஷயமும், அது தோலில் ஒரு சிறிய பகுதியாக கூட இருப்பினும், நமக்கு "அடடே!" என்று தோன்றி, நமது மூளை டோபமைனில் மூழ்கி, "அதை கண்டே தீர்வேன்!" என தீர்மானிப்போம், பின்னர் அந்த பாலியல் என்னும் ஒற்றை வழியில் சிந்தை செல்லும். அப்போது நேராக அந்த ஆபாசவியலுக்கு தான் நீங்கள் செல்வீர், அந்த சிந்தையின் பாங்கிற்கு நேராக நம் சிந்தை செல்லும்.*

*உங்கள் மூளை இந்த குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு விருப்பத்தை திருப்திப்படுத்தத் தொடங்குகிறது. அதற்கு நீங்கள் உணர்ச்சிவயப்பட துவங்குவீர்கள்; அது உங்களுக்கு காந்தமாக மாறும். டைம் பத்திரிகை கட்டுரையில் முன்னர் மேற்கோள் காட்டியிருந்தது என்னவெனில், ஆரோக்கியமான இளைஞர்கள் நிஜத்தில் பெண்களுடன் பாலியலில் சுறுசுறுப்பாக ஈடுபடும்போது, ஆபாசங்களைப் பல ஆண்டுகளாக பார்த்து மூளை மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் அவர்களோடு உடல்ரீதியாக சரியாக ஈடுபட முடிவதில்லை. இயற்கை செயல்பாடு அங்கு அற்றுப்போய்விடுகின்றது. இது எவ்வளவு சேதத்தை உண்டாக்குகிறது அல்லவா!*

***1 பேதுரு 1:14 (NASB) 'நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து'***

*நீங்கள் ஓர் கிறிஸ்துவராய் இருக்கும் பட்சத்தில், இரட்டை வாழ்க்கையில் சிக்கிக்கொள்வீர். இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் அதை கட்டுப்படுத்த வேண்டும் மற்றும் அதை விட்டு விலகி செல்ல முடிவு செய்ய வேண்டும்.*

➢ ***புள்ளிவிவரங்கள்:***

*18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட கிறிஸ்துவ ஆண்கள் பற்றின புள்ளிவிவரங்கள்:*
- *77 சதவிதத்தினர் குறைந்தபட்சம் மாதாமாதத்திற்கு ஆபாசப்படம் பார்க்கின்றனர்.*
- *36 சதவிதத்தினர் தினசரி ஆபாசப்படம் பார்க்கின்றனர்.*
- *32 சதவிதத்தினர் தாங்கள் ஆபாசவியலுக்கு அடிமையாகியுள்ளதை ஒப்புக்கொள்கின்றனர் (மேலும் வேறு 12 சதவிதத்தினர் அப்படியிருக்க வாய்ப்பிருக்கிறது என எண்ணுகின்றனர்).*

*நடுத்தர வயது கிறிஸ்தவ ஆண்கள் (31 முதல் 49 வயது வரை) பற்றின புள்ளிவிவரங்களும் கலக்கம் மூட்டுவதாய் உள்ளது:*
- *77 சதவிதத்தினர் கடந்த 3 மாதங்களில் வேலையில் இருக்கும்போது ஆபாசப்படம் பார்த்திருக்கின்றனர்.*
- *64 சதவிதத்தினர் குறைந்தபட்சம் மாதாமாதத்திற்கு ஆபாசப்படம் பார்க்கின்றனர்.*
- *18 சதவிதத்தினர் தாங்கள் ஆபாசவியலுக்கு அடிமையாகியுள்ளதை ஒப்புக்கொள்கின்றனர் (மேலும் வேறு 8 சதவிதத்தினர் அப்படியிருக்க வாய்ப்பிருக்கிறது என எண்ணுகின்றனர்).*

*திருமணமான கிறிஸ்தவ ஆண்களும் கூட ஆபாசப்படங்களுக்கும் கள்ளத் தொடர்பு விவகாரங்களிலும் பயமுறுத்தும் விகிதத்தில் இரையாகி உள்ளனர்:*
- *55 சதவிதத்தினர் குறைந்தபட்சம் மாதாமாதத்திற்கு ஆபாசப்படம் பார்க்கின்றனர்.*
- *திருமணமாகியும் 35 சதவிதத்தினர் கள்ளத் தொடர்பு வைத்துக்கொள்கின்றனர்.*

*(ஆதாரம்: 2014 இல் நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தி 388 சுய அடையாளம் காணப்பட்ட கிறிஸ்துவ வயது வந்த ஆண்களை மாதிரியாக கொண்டு பார்னா குரூப் ஒருங்கிணைத்து இலாப நோக்கமற்ற அமைப்பான ப்ருவன் மென் மினிஸ்ட்ரிஸால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு)*

## உணர்வழிப்பு *(Desensitization)*, ஆபாசவியலில் நமது மூளை – ஆபாசவியலின் பயமுறுத்தும் விளைவுகள், டாக்டர்ஸ்காட்ஹெல்த், *yourbrainonporn.com*

- *அடுத்தது உணர்வழிப்பு. உண்மையில் இதுவும் அடிமைத்தனத்தை சார்ந்ததாய் இருக்கும் போதையைப் பற்றிய காரியம் தான். நீங்கள் போதை வஸ்துக்களுக்கு பழக்கமடையும் போது, நீங்கள் அதனுடனான சகிப்புத்தன்மையை அதிகரித்துக் கொள்கிறீர்கள். அதனால், தாங்கள் அதன் தூண்டல்களுக்கும் பழகிக்கொள்வீர்கள். தாங்கள் இரண்டு உலாவி தாவல்களில் (browser tabs) இணைய ஆபாசப்படத்திற்கு பழக்கமடையும் போது, தங்களுக்கு நீண்ட அமர்வுகள், மற்றும் பல பங்காளிகள் வேண்டுமென்றாகிவிடுவீர்கள். பழைய விஷயங்கள் தங்களுக்கு ஏற்கனவே கொடுத்ததை இனிமேலும் கொடுக்காது, அப்போது நீங்கள் அதே இன்பம் கிடைக்க பித்துப்பிடித்த போழி உருவமற்ற வழிபாடிற்கும், பித்துப்பிடித்த சிற்றின்பக் கேளிக்கைக் களியாட்டம் போன்ற பற்பல பித்துப்பிடித்த செயல்களில் ஈடுபடுவீர்கள். இதனால் தாங்கள் அறியாமல், மனநோயாளிகளாகவோ அல்லது மன ரீதியாகவோ கலங்கின பாதையில் பயணிக்க நேரிடுவீர். இது உணர்வழிப்பை ஏற்படுத்துகிறது ஏனெனில் தங்கள் மூளை அதற்கு தேவையானது கிடைக்காதபட்சத்தில் – அது தன் உணர்ச்சியை நீக்கிவிடுகிறது. தங்களுக்கு இன்பம் கொடுத்த வாழ்க்கையின் இயற்கையான காரியங்களும் கூட பிறகு உண்மையில் தங்களுக்கு அவ்வின்பத்தை இனி தராது போகும்.*

**ரோமர் 12:1-2 (NASB): ‘ [1]அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. [2]நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்’.**

***புதிதாகிறதினாலே*** *- அந்த புதிதாக்குதல் உண்மையில் நீங்கள் யார் என்பதில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். இது ஒரு விருப்பத் தேர்வே ஆகும்.*

*நமது பாவப்பட்ட நிலைமையில், ஒருவரது மனதை புதுப்பிப்பது என்பது தொடர்ச்சியான செயலாகும், அதேபோல் தினமும் நமது சிலுவையையும் எடுத்தாக வேண்டும். இது எதைக்குறிக்கிறது என்றால், கிறிஸ்துவ ஜீவியம் ஆவிக்குரிய செயல் பழக்கங்கள் மூலம் இயக்கப்பட வேண்டும். தீய விஷயங்கள் பழக்க வழக்கமாகிவிடும். அதை நிஷ்பலமாக்க, அந்த பழக்கத்திற்கு பதிலாக ஏதேனும் நற்காரியம் ஒன்று தேவைப்படுகிறது. நாம் அவ்வாறு செய்யாவிடில், நாம் உணர்வாக்கதுக்குள் சென்று அதனோடு பழக்கமுற்று, ஆபத்தும் அவலட்சணமானவற்றின் தேவையை அதிகமாக்கி உணர்வழிப்புக்குள் சென்று விடுவோம். அடுத்து நாம் ஹைபோபிரண்டாலிட்டிக்கு (Hypofrontality) செல்வோம்...*

**ஹைபோபிரண்டாலிட்டி *(Hypofrontality - is a state of decreased cerebral blood flow (CBF) in the prefrontal cortex of the brain)*, ஆபாசவியலில் நமது மூளை – ஆபாசவியலின் பயமுறுத்தும் விளைவுகள், டாக்டர்ஸ்காட்ஹெல்த், *yourbrainonporn.com***

- *அடுத்தது ஹைபோபிரண்டாலிட்டி (நமது மூளையின் முன்நுதல் புறணிக்கு செல்லும் இரத்த ஓட்டம் குறைதல்) . எஞ்சியுள்ள பாலூட்டிகளிடமிருந்து நம்மை வேறுபடுத்தும் மிகப்பெரிய காரணி எதுவென்றால், நமது மூளையில் நாம் பெற்றுள்ள ஒரு பகுதியே ஆகும். நமக்கு வரும் முதல் நிலையான உள்ளுணர்வுகளை புறக்கணித்து ஒதுக்க கூடிய செயலை அந்த பகுதி செய்கிறது. “போய் பார்”, “ஆபாசம், ஆபாசம், ஆபாசம்” என்று தோன்றும்போது, நமது முன்நுதல் புறணி உடனடியாக, “அடடே! அதை நாம் செய்ய வேண்டாம்! இந்த இந்த காரணத்தினால் அது உண்மையில் தவறான எண்ணமாகும்.” என நமக்கு உணர்த்தும். நமது முன்நுதல் புறணி, செயல் இயக்கங்களை நமக்கு கட்டளையிடுகின்றன. மேலும் எவ்வகையான பழக்க அடிமைத்தனத்தில் வீழ்ந்திருப்போமாயின் – அது மெட்டாம்பெடாமைன், ஹெராயின் போன்ற போதைப்பொருட்களுக்கு அடிமையாகுதலோ, தற்காலத்தில் பாலியலுக்கு அடிமையாகுதலோ அல்லது உயர்வேக இணைய ஆபாசவியலுக்கு அடிமையாகுதலோ, எதுவாயிருந்தாலும், இவை அனைத்தினாலும் நமது மனத்திண்மையை சீரழிக்கிறோம், அதாவது, அந்த இயக்கங்களை புறக்கணித்து ஒதுக்கும் நமது முன்நுதல் புறணியின் திறனை நாம் சீரழிக்கிறோம், அதினால் அதற்கு தெளிவாக சிந்திப்பது கூட கடினமாகிறது. நமக்கு எந்த சிறிய தூண்டுதல் கிடைப்பினும் நமக்குள் திட்டமிடப்பட்டபடி அதை நாம் அடைய எண்ணுவோம். எவ்வகை அடிமையாகுதலாயினும், நாம் கவனிக்க சிரமப்படுவோம் மாறாக அதை அடைவதே எண்ணமாக கொள்வோம்.*

*கட்டுப்படுத்தும் ஆற்றலை நாம் இழக்க துவங்குவோம்!*

*CQ செயலி பயனர் இவ்வாறாக கூறுகிறார்: திருமணமான 4 ஆண்டுகளில் அதாவது 24 வயதில் என் கணவரை பிரிந்து வந்துவிட்டேன். அவர் ஆபாசவியலுக்கு எவ்வளவு அடிமையாகி இருந்தாரெனில், காணொளியில் வரும் பெண்ணைப் போல் என்னையும் நடந்து கொள்ள எதிர்பார்த்தார் மேலும் எங்களது நெருக்கத்தை விடவும் இணையத்தளத்தில் ஆபாசவியலை காண்பதையே விரும்பினார். இறுதியில் நான் அவருக்கு கடைசி முடிவை எடுக்க வாய்ப்பளித்தேன், அவர் எங்களது திருமண வாழ்விற்கு பதிலாக தான் அடிமைப்பட்டிருக்கும் ஆபாசவியலையே தேர்ந்தெடுத்தார். நான் ஆபாசவியலை நவீன கால விபச்சாரத்தின் ஓர் வடிவமாகத் தான் கருதுகிறேன்.*

**பிலிப்பியர் 3:12-14: ‘ [12]நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். [13]சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை;**

***ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,[14] கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்'.***

*மற்றுமொரு நமது ஆவிக்குரிய செயல் பழக்கங்கள் என்னவெனில், நமது பாவமான கடந்தகாலம் அனைத்தையும் தொடர்ச்சியாக விட்டொழிப்பதே ஆகும் – தொடர்ச்சியாக விட்டுவிடுதலாகும் – அதினால் நாம் முன்னோக்கி முன்னேற நாம் விடுவிக்கப்பட்டு நமது ஆவிக்குரிய எதிர்காலத்தை பற்றி பிடிப்போம். நமக்கு பின்னிருப்பதையும் நாம் அடைய வேண்டிய முன்னிருப்பதையும் ஒரேநேரத்தில் நாம் பிடித்துக்கொண்டிருக்க இயலாது. அதினால் தாங்கள் முறிந்து தான் போவீர். ஒரு கிறிஸ்துவராக, நாம் இத்தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் ஏனெனில், நடுவில் நிற்பது ஓர் நல்ல நிலையல்ல.*

## செயல்படாத மனஅழுத்த வட்டகைகள் (Dysfunctional stress circuits), ஆபாசவியலில் நமது மூளை – ஆபாசவியலின் பயமுறுத்தும் விளைவுகள், டாக்டர்ஸ்காட் ஹெல்த், *yourbrainonporn.com*

- *செயல்படாத மனஅழுத்த வட்டகைகள் – இதற்கு உணவு ஓர் உகந்த எடுத்துக்காட்டாய் இருக்கும். உணவு பழக்கமும் கூட அதிகம் அடிமைப்படுத்துவதாய் இருக்கும். அனைவரும் எப்போதாவது சர்க்கரையை மிதமிஞ்சி உட்கொள்ள நேரிடும். தாங்கள் மன அழுத்தத்தில் இருக்கும்போது என்ன நடக்கிறது? நீங்கள் அந்த உணவிற்கு தான் நேராக செல்வீர்கள். ஆகையால், நாம் அழுத்தமடையும் போது, அதாவது இவ்வாறான குறிப்பட்ட அடிமைத்தனம் இருந்தால், நமக்கு செயல்படாத மனஅழுத்த வட்டகைகள் ஏற்படுகின்றன. ஒரு தடவை சிறிது அழுத்தி ஏற்பட்டாலும், நமது சிந்தை நேராக அந்த ஒற்றை வழி பாதையான 'அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ளலாம்' என்பதை நோக்கி சென்று விடுகிறது.*

*தாங்கள் கட்டுக்கடங்காத மனிதராய் மாறிவிடுவீர்கள், அதினால் தங்களை சுற்றியுள்ளோரையும் தாங்கள் காண்போரையும் சேதப்படுத்துவீர்கள். அதில் பலரும் அடிமைகளாக இருப்பார்கள்.*

***I கொரிந்தியர் 6: 16-20 (NASB): '[16] வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. [17] அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். [18] வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான். [19] உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? [20] கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.'***

***உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் –*** *ஆபாசப்படங்களைப் பார்ப்பதினால் அடிமை வர்த்தகம் தொழிலை ஊக்குவிப்பது என்பது தேவனை மகிமைப்படுத்துமா? நிச்சயமாக இல்லை!*

*ஆபாசவியலில் அல்லது மெய்நிகர் பாலியலில் ஈடுபடுவது என்பது கடைந்தெடுத்த ஒழுக்கக்கேடில் முன்னேறி அதில் இணைக்கவும் செய்கிறது. ஆவிக்குரிய செயல் பழக்கவழக்கங்கள், கிறிஸ்து மூலமாய் நம்மை தேவனிடத்தில் (நம்மை சொந்தமாக கொண்டிருப்பவர்) சேருமாறு கட்டளையிட்டு, எல்லாவிதமான ஒழுக்கக்கேடிலிருந்தும் நம்மை விலக்கி ஓடச் செய்யும்.*

## மூன்றாம் செயல் நிலை: இணையதள பாலியல் எந்த வடிவத்தில் இருந்தாலும் அதில் ஈடுபட்டு அத்தகைய தேர்வுகள் மூலம் வரும் வலிகளில் வாசம் செய்வதன் மூலம் உங்களுக்கு நீங்களே ஏற்படுத்தும் தீங்கு மற்றும் அழிவுகளை மனதில் உணர்ந்து ஒப்புக் கொள்ளுங்கள்.

*ஆபாசவியலும் மெய்நிகர் பாலியலும் நமது கிறிஸ்துவ நம்பிக்கைகளுக்கு என்ன செய்கிறது?*

***'உங்கள் முயற்சிகளை மதியுங்கள், உங்களையே மதியுங்கள். சுய மரியாதை சுய ஒழுக்கத்திற்கு வழிவகுக்கும். இவ்விரண்டையும் ஸ்திரமாக அடைந்துவிட்டீர் எனில், அதுவே நிஜமான சக்தியாகும்'. – கிளின்ட் ஈஸ்ட்வுட்***



*நெருக்கமான உறவுகளைப் பற்றிய நமது நம்பிக்கை அமைப்பு எளிமையும் புனிதமாயும் உள்ளது:*

***ஆதியாகமம் 2:21-25: (NASB): ' [21]அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். [22] தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். [23] அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். [24] இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். [25] ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.'.***

*நமது நம்பிக்கை அமைப்பு நம்பகத்தன்மையை அடிப்படையாக கொண்டுள்ளது மேலும் அதின் மூலமாய் ஆழமான பிணைப்பையும் பெற்றுள்ளது.*

## *மூளை – பயன்படுத்துங்கள் இல்லையேல் பயனற்றுபோகும், ஆபாசவியல் அடிமைத்தனத்தைப் பற்றின அறிவியல், AsapSCIENCE (social media channel)*

- *பல சமயங்களில், ஆபாசவியல் அடிமைத்தனம், தங்களது இணையை வசீகரமற்றவராய் தங்களுக்கு தோன்ற வழிவகுக்கும். நற்செய்தி என்னவெனில், அது நிரந்தரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. வழக்கமாக மக்கள் இதன் செயலமைவை புரிந்துகொண்டு, அது அவர்களது உறவுகளை பாதிப்பதை உணர்ந்தால், அவர்கள் அதை நிறுத்த முடியும். மூளை என்பது 'பயன்படுத்துங்கள் இல்லையேல் பயனற்றுபோகும்' என்னும் உருப்பாகும், ஏனெனில், நீங்கள் தூண்டும் நரம்பியல் தொடர்புகள், வலுவாக வளர்ந்து, செயல்படுத்தப்பட விரும்பும், எதை நீங்கள் புறக்கணிக்கிறீர்களோ அவைகள் பலவீனமடையும். தங்களது தசைப்போல் இதுவும் செயல்படும். அதாவது நாள் முழுக்க உட்கார்ந்தே இருந்தால் ஏதேனும் காரியம் செய்ய தோன்றும், அதுவே நெடுநாட்களாய் உபயோகமற்றதாய் இருந்தால், அது மெத்தனமடைந்து விடும். கிருபையாக, இந்த 'பயன்படுத்துங்கள் இல்லையேல் பயனற்றுபோகும்' மூளையினால், இத்தகைய பழக்கங்களை அதிகப்படுத்தும் 'உபயோகப் படுத்தாத நரம்பணு கூழ்மங்கள் மாற்றியமைக்கப்படும் (Neuroplasticitic change)' என்னும் அமைப்பை நன்மையான பழக்கங்களை அடைய கூட உபயோகப்படுத்தலாம்.*



*இது ஓர் நற்செய்தியாகும். சிலவற்றிலிருந்து நாம் விலகி நடக்க ஆரம்பிப்போமேயனால், இறுதியாக அது நமது மூளையை அதுவே சரி செய்து கொள்ள அனுமதிக்கிறது. ஆனால், இது சுலபமானது அல்ல.*

மறுபடியும் டைம் பத்திரிகையில் வந்த ஓர் கட்டுரையை நாங்கள் மேற்கோள் காட்ட விரும்புகிறோம், தீய பழக்கங்களை எந்த ஆண்கள் நிறுத்துகிறார்களோ, அவர்களால் தங்கள் இணையுடன் திரும்பவும் ஆரோக்கியமாக புணருதலில் ஈடுபட முடிகிறது.

இந்த பிரச்சனை எவ்வளவு தீமை மற்றும் இழிவானதாய் உள்ளது என்று பாடத்தை ஆரம்பித்தோம். அதன்பின்னர், நம்மையும் நம்மை சுற்றியுள்ளோரையும் நாம் காயப்படுத்துகிறோம் என்பதை பார்த்தோம். நாம் எதை நம்பிக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் இப்போது பார்க்கப்போகிறோம். அங்கு நாம் இனிமேலும் சென்று விடக்கூடாது என்பதற்கு பற்பல ஆதாரங்களை இது நமக்கு தரும். இந்த காரணங்கள் அனைத்தும் நம் முன் வைக்கப்பட்டு திரும்பத்திரும்ப செயல்முறை படுத்த வேண்டும்.

***எபிரேயர் 13:4-5 (NASB): ‘ [4] விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். [5] நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.’.***

*திருமண பந்தத்தின் அந்தரங்க புனிதத்தன்மைக்கு பெரும் சக்தி உள்ளது. இதனோடு மனத்தாழ்மை மற்றும் மனநிறைவு சேர்த்து கொண்டால் உறுதியான மற்றும் உண்மையுள்ள வாழ்வை நாம் உருவாக்க முடியும்!*

## ஆபாசவியல் பாலியல் கடத்தலை இயக்குகிறது, தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *பாலியல் கடத்தலுக்கு தேவையானவற்றை கொடுப்பதில் ஆபாசவியல் தொழிலுக்கும் பங்கிருக்கிறது. பாலியல் கடத்தலில் இருந்து மீட்கப்பட்டோர் அறிக்கையிடுவது என்னவெனில், பல மணி நேரம் திணிக்கப்பட்டு ஆபாசப்படங்களை பார்ப்பது என்பது திட்டவட்டமான உணர்வழிப்பு செயலாகும். இது தான் ஒடுக்குவோரின் பயிற்சியாக கூறப்படுகிறது. மீட்கப்பட்டோரில் பாதிப்பேர் நினைவுகூருவது என்னவெனில், திணிக்கப்பட்டோ ஜாலத்தினாலோ அவர்களை ஆபாசப்படத்தில் நடிக்க வைத்து அவமதிக்கப்படுவதற்கு நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். தற்போதைய இணைய ஆபாச காட்சிகளில் குறைந்தபட்சம் 20 சதவீதத்தினர் கடத்தப்பட்ட பெண்களைச் சித்தரிக்கிறார்கள் என்று கணக்கிடப்படுகிறது, மேலும் அதை கண்டுபிடிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. 2014 ஆம் ஆண்டில் 78 பில்லியன் தடவை பார்க்கப்பட்ட உலகின் மிகப்பெரிய ஆபாச நுழைவுத் தளம், ஆண்கள் மற்றும் பெண்களால் மிகவும் அடிக்கடி பார்வையிடப்பட்ட முக்கியமாக ஆபாச தளங்கள் மற்றும் சட்டவிரோத தளங்களைப்பார்த்து அதேபோல் இயங்கச்செய்வதற்கு ஒரு மையமாக இது பார்வையாளர்களுக்கு செயல்படுகிறது, கடத்தல்காரர்களுக்கு, அவர்கள் மாட்டிக்கொள்ளாமல், அழகான இளம் வயதினருக்கு ரொக்கமாக பல மடங்கு பணம் கிடைப்பதற்கான பல வாய்ப்புகளை இத்தகைய தளங்கள் தருகிறது.*

ஆபாசவியல் பாலியல் கடத்தலை இயக்கி அதின் தேவையையும் பூர்த்தி செய்கிறது.

- ***புள்ளிவிவரங்கள்:***

  *பாலியல் கடத்தல்காரர்கள் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பயிற்சி அளிக்க ஆபாசப்படங்களை காண்பித்து, அவர்கள் கட்டாயப்படுத்தி ஈடுபடச் செய்யும் பாலியல் செயல்களுக்கு அவர்களை உணர்விழக்கச் செய்வார்கள். தொடர்ந்து புதிய, அதிக வன்முறையான காம உணர்வு கொண்ட பதிவுகளையே ஆபாசவியல் பயனர்களுக்கு தேவைப்படுகின்றது. இத்தேவையை பூர்த்தி செய்ய அதிக பெண்களும் குழந்தைகளும் கடத்தலுக்கும் விபச்சாரத்திற்கும் ஆளாகுகின்றனர். (ஆதாரம்: நேஷனல் சென்டர் ஆன் செக்ஸுவல் எக்ஸ்ப்லாய்டேஷன். (2015) போர்னோகிராபி + செக்ஸ் டிராப்பிக்கிங் : தி பேக்ட்ஸ். http://stoptraffickingdemand.com/facts/)*

***ரோமர் 6:15-19: (NASB) ' [15] இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவஞ்செய்யலாமா? கூடாதே. [16] மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? [17] முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். [18] பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். [19] உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.'***

*இரக்கத்திற்கும் தயவிற்கும் நாம் அடிமையாய் இருப்பது மனிதன் சுதந்திரமாய் இருப்பதற்கு சமம். பாலியல் தொழிலின் சீரழிவைப் புரிந்து கொண்டு அதனை ஆதரிப்பதும் அதற்கு அடிமை என்பதையே குறிக்கிறது. அதை அவ்வப்போது மட்டும் பயன்படுத்தி இருந்தாலும் சரி.*

## *முறிவுக் கடிதம், ஆபாசவியல் தங்களது பிரச்சினை அல்ல, ஜேசன் மார், TEDxCincinnati (இது ஆபாசவியல் சுழலில் மாட்டப்பட்ட ஓர் மந்திரியினால் எழுதப்பட்டது)*



- *இவ்வாறாக அது எழுதப்பட்டுள்ளது: நாம் முதலில் சந்தித்தபோது, அது புதிதாய் சொல்லப்போனால் இரகசிய டேட்டிங் (ஈர்ப்புடையவரோடு வெளியே செல்லுதல்) உறவு போல் தோன்றியது. அதிக கவனம், பீடிப்பு, எப்போதும் மேல் நோக்கிச் செல்லும் உணர்வையே கொண்டிருந்தேன். உண்மையில் உன்னை அதிகம் நேசித்தேன், ஏனெனில், நான் வீழ்ந்த போதெல்லாம் நீ என்னை தூக்கி எழுப்ப என்னோடிருந்தாய். ஆனால் அதன்பிறகு எல்லாம் மாறிவிட்டன. சரீர பிரகாரமாக என்னை சுகமாய் வைத்தபோதிலும், உன் வழியால் என்னைப் பற்றியே எனக்கு கோரமாய் உணரச் செய்தாய். பின்னர் தான் புரிதல் வந்தது நீ என்னிடத்தில் பொய் கூறி வந்துள்ளாய் என்று. என்னிடத்தில் நீ உண்மையுள்ளவளாய் கூட இருந்ததில்லை என்பதை புரிந்துக்கொண்டேன். கிட்டத்தட்ட என்னுடைய எல்லா நண்பர்களுடனும் நீ உறவு கொண்டிருந்திருக்கிறாய். உன்னை என் வாழ்வில் அனுமதித்து உன் பொய்களை நான் நம்பும் அளவு நான் மூடனாய் இருந்துள்ளேன். இப்போது நான் உன்னுடனான உறவை முறித்து கொண்டதிலிருந்து, சுலபமாய் இல்லாது போயினும், முயற்சி செய்து என் குடும்பத்தை, என் திருமண பந்தத்தை, மிக முக்கியமாக என் மனம், சிந்தை மற்றும் அறிவை திரும்ப பெற்றுக்கொண்டேன். என்னைப் பற்றிய சிறப்பை நம்பினது பெரிய தாவலாய் தோன்றினாலும், நான் அடைந்ததிலேயே மிகச்சிறந்த மாற்றம் அது தான். எனவே, இப்போது நான் ஊக்கம் பெற்றுள்ளேன் மேலும் என்னால் இயன்ற மட்டும் உன்னால் பாதிக்கப்படாத படி பல மனிதர்களை காப்பாற்றும் நோக்கத்தில் செயலில் இறங்கியுள்ளேன். நான் உன் உணர்வுகளை விட்டு வைத்து , 'ஓ! கவலைப்பாடாதே. நீ அதற்கு காரணமல்ல நான் தான்.' என்பது போல் கூறுவேன் என்று எண்ணாதே. ஏனெனில் அன்பான ஆபாசவியலே, நமக்குள் எல்லாம் முடிந்தாயிற்று என்பதில் மகிழ்கிறேன். என்னை தொடர்பு கொள்ள எண்ணாதே, நினைவில் வைத்துக்கொள், நானல்ல காரணம், நீ தான்.*



*நாம் எதை பிடித்துக்கொள்ள வேண்டும்?*

***1 கொரிந்தியர் 7:1-5: (NASB) ' [1] நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக்குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது. [2] ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும்,***

**அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். [3] புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். [4] மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. [5] உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.'**

திருமணத்திற்குள்ளான புணருதலின் தேவையை அப்போஸ்தலர் புரிந்து வைத்திருந்தார். தேவன் ஏதோவொரு ஒரு காரணத்திற்காக தான் அதை சுகமாய் படைத்துள்ளார். புணருதல் அதின் சரியான இடத்தில் உண்டாக்கப்பட்டதும் கூடுவதற்கு தேவனால் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும்.

நல்ல நோக்கங்களையும் நமது இருதயத்தின் திட்டங்களை நிறைவேற்ற நமக்கு, நீதிமொழிகள் 15:22 இல் நமக்கு கூறின கோட்பாட்டின் படி, புறம்பே இருந்து உதவி தேவைப்படுகிறது.

**நீதிமொழிகள் 15:22: 'ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்.'**



## நான்காம் செயல் நிலை: ஆபாசம் மற்றும் மெய்நிகர் பாலியல் ஆகியவை உங்கள் முக்கிய கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு எவ்வாறு முரண்படுகின்றன என்பதையும் உங்கள் நம்பிக்கைகள் அனைத்தையும் எப்படி அழிக்கின்றன என்பதையும் உணர்ந்து ஒப்புக்கொள்ளுங்கள்.

நாம் திட்டமிடாது தற்செயலாய் பாலியல் தொழிலில் தொடர்பு பெற்றிருந்தாலும், அதனை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்த வேண்டும்? அதனை நாம் எவ்வாறு மாற்றிக்கொள்ள வேண்டும்?

**'மனதின் ஸ்திரத்தன்மை என்பது பல விஷயங்களால் ஆனவை அதனை விளக்குவது மிக சிரமம். அதன் குணங்கள் தியாகம் மற்றும் தன்னலமின்மை ஆகும். மேலும், மிக முக்கியமாக, அடிப்பணிய மறுக்கும் பூரணமான ஒழுக்கமான மனத்திட்பமும் அதனோடு சேர்ந்திருக்க வேண்டும். அது மனதின் நிலையாகும் – அதை நீங்கள் 'கிரியைகளால் ஆன செயல்' என அழைக்கலாம்'. – வின்ஸ் லொம்பார்டி**

### தங்களது மூளையை தாங்கள் மறுசீரமைக்கலாம், ஆபாச அடிமைத்தன மீட்பு, *curethecraving.com*

- ஆராய்ச்சிகள் கூறுவது என்னவெனில், தினமும் முப்பது நாட்களுக்கு, ஒரு புதிய எண்ணத்தை உணர்வோடு மூளைக்கு தொடர்ந்து செழுத்திக்கொண்டிருந்தால், அது புதிய நரம்பியல் பாதையை மூளையில் உருவாக்கும். தொடர்ந்து தொண்ணூறு நாட்களுக்கு தாங்கள் அதை உறுதிப்படுத்தி கொண்டிருந்தால், அதுவே மூளையில் பிரதான நரம்பியல் பாதையாக மாறும். உயிரணு நிலையில், அதுவே நீங்களாக மாறுவீர்கள். தங்களது மூளையை தாங்களே துல்லியமாக வித்தியாசமாக சிந்திக்க மறுசீரமைக்கலாம்.

  - ***புள்ளிவிவரங்கள்:***

    *ஆராய்ச்சியாளர்கள் நம்புவது என்னவெனில், ஆபாசப்படங்கள் மூளையை அதிகமாக தூண்டுவதால், போதை அடிமைத்தனத்தைப் போல் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மூளைக்கு ஏற்ப்படுத்துகின்றன. ஆபாசப்படங்களின் உபயோகத்தின் நேரங்கள் அதிகரித்தால், மூளைத் திசுக்களின் அளவு குறைய துவங்குகிறது.*

*(ஆதாரம்: Simone Kühn, Jürgen Gallinat, "Brain Structure and Functional Connectivity Associated With Pornography Consumption: The Brain on Porn," JAMA Psychiatry 71 (July 2014): 827-834)*

### ஐந்தாம் செயல் நிலை: தாங்கள் முன் கண்டு உணர்ந்து ஒப்புக்கொண்ட அனைத்து விஷயங்களையும் தொகுத்திடுங்கள்; பின்னர் அதனை எழுதி தாங்கள் மிகவும் நம்பும் தேவன் முன்பாக வைத்திடுங்கள். பின்னர் பரிசுத்தமடைய வேண்டி தினமும் தங்கள் கவனத்தை புதுப்பியுங்கள்.



புதிதான, பொறுப்பான மற்றும் தேவபக்தியுள்ள பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஏன்?

**கலாத்தியர் 6:7-8: (NASB) '[7] மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். [8] தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.'**

**தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்** – நமது அந்தரங்க வாழ்வும் பொது வாழ்வும் ஒன்றிணைய வேண்டும். நீங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறீர்கள் என்றால், பாவத்தை விட்டு வெளியேறுவதாக நீங்கள் உறுதிகொடுத்துள்ளீர்கள். நிச்சயமாக, நாம் பாவத்தை நம்மோடு இழுத்துக்கொண்டு வருவோம், ஆனால், அதிலிருந்து விடுபட பிரயாசம் எடுத்து கொண்டிருக்க வேண்டும். அது நமக்கு அதி முக்கியத்துவமாய் இருத்தல் வேண்டும்.

ஓர் விரைவுவான தெளிவுரை என்னவெனில்... மெய்நிகர் பாலியல் என்பது இணையதளத்தில் யாரோ ஒருவரோடு நாம் தொடர்பு கொள்வதாகும். யாரையும் அதில் நாம் தொடப்போவதில்லை என்பதால் சிலர் இது சரியென எண்ணுகிறார்கள். எளிமையாய் சொல்ல வேண்டுமெனில், இது விபச்சாரம் ஆகும்.

நம்மிடத்தில் நேர்மையான ஒழுங்கு இருத்தல் வேண்டும், மேலும், நமது குழந்தைகளுக்கும் நாணயத்தை சொல்லி கொடுக்க வேண்டும். அதினால் தான் இந்த பாடத்தை தங்கள் பதின் வயது இளைஞர்களோடு பகிர்ந்துகொள்ள பரிந்துரைக்கிறோம். இதன் மூலமாய் இணையதள பாலியல் தொழிலினால் ஏற்படும் இருளும் தீமையையும், அதற்கு மாறாய், தேவன் நமக்கு வைத்துள்ள திட்டத்தையும் அவர்களுக்கு காண்பிக்க முடியும்.

### புகைப்படக் கருவியில் பாலியலை வாங்குதல் (திருத்தப்பட்டது), தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், TEDxGreenville

- இறுதியாக, வளர்ந்து வரும் ஆராய்ச்சிகள் கருதுவது என்னவெனில், இந்த ஆபாசவியல் தொழிலே, ஒரு வகையான பாலியல் கடத்தலாகும், அதனை 'புகைப்படக் கருவியில் பாலியலை வாங்குதல்' என்றழைக்கின்றனர். ஆபாசப்படங்களில் நடிப்போருடனான நேர்காணல் கடத்தலிலிருந்து மீட்கப்பட்டோரின் நேர்காணலுக்கு ஒத்திருந்தது. நிஜமாய் நடக்கும் பாலியல் தாக்குதல்களை அவர்கள் தாங்கிக் கொள்கிறார்கள். அதினால் அவர்கள் எல்லா வழிகளிலும் சொல்லொண்ணா சரீர தாக்குதல்களையும், மொழி ரீதியான வசவுகளையும், பல சமயங்களில் ஒரு காட்சியில் பல பேரிடம் இருந்து இக்கொடுமைகளை அனுபவிக்கிறார்கள். இது இந்த தொழில் உள்ள போதை மருந்து துஷ்பிரயோகம் மற்றும் அடிமைத்தனம் பற்றிய நன்கு ஆவணப்படுத்தப்பட்ட பாதிப்பிற்கு விளக்கமளிக்கிறது. மேலும், பொதுவான மக்கள் தொகையில் உள்ளவர்களுக்கு வரும் பாலியல் நோய்களின் விகிதத்தை விட, ஆபாசப்படங்களில் நடிப்போருக்கு 10 மடங்கு அதிகமாய் வருகிறது. அதில் நடிப்பவர்கள் பாதுகாப்பற்ற புணருதலை பல்வேறு நபர்களுடன் 4 அல்லது 6 மாதங்களில் ஈடுபடுவதால், நோய் தொற்றின் விகிதம் கட்டுக்கடங்காமல் அதிகரிக்கிறது. அதனோடு கூட, வயது

வந்த நடிகர்கள், அபரிமிதமான போதைப் பொருள் உட்கொள்ளுதல், மன அழுத்தம், மது, தற்கொலை, விபத்து மற்றும் கொலை ஆகியனவற்றில் ஈடுபடுவதால் எந்தவொரு சட்டரீதியான தொழிலில் இருப்பதை விட இதில் மாபெரும் இறப்பு விகிதம் ஏற்படுகிறது.

நீங்கள் இதை ஆதரிக்கப் போகிறீர்களா?

- ***புள்ளிவிவரங்கள்:***

*பதின்வயதினரில் ஏறக்குறைய பாதி பேர் (46%) கூறுவது என்னவெனில், "நிர்வாண புகைப்படமோ அல்லது ஆபாசப்படமோ அல்லது காணொளியோ அனுப்புவது தற்கால பதின்வயதினரின் தினசரி வாழ்க்கையின் ஓர் பகுதியாக உள்ளது."*

*18 வயது இளைஞர்களில் 10 இல் 7 பேர் (72%) கூறுவது என்னவெனில், "பாலியல் மீது நடைமுறைக்கு புறம்பான மனப்பான்மையை ஆபாசவியல் தோன்றச்செய்கிறது" மேலும் அந்த "ஆபாசவியல், வாலிப பிள்ளைகளின் மனதில் பாலியல் (அ) புணருதல் பற்றிய கருத்தின் மீது ஆபத்தான தாக்கத்தை ஏற்படுத்துகிறது".*

*மூன்றில் இரண்டு (66%) பங்கு வாலிப பெண்கள் மற்றும் ஏறக்குறைய பாதி வாலிபர்கள் (49%) ஒத்துக்கொள்வது என்னவெனில், "ஆபாசப்படங்கள் கிடைப்பது சுலபமற்று போனால், வளர்ச்சி சுலபமாய் இருக்கும்..."*

*(ஆதாரம்: "Studies shed light on sexual behavior of teenagers," Burnet Institute, 10/9/14, http://www.burnet.edu.au/news/435_burnet_studies_shed_light_on_sexual_behaviour_of_teenagers)*

***இந்த போராட்டத்தில் பெருமைக்கு இடமில்லை; மாறாக, உன்னதமான கொள்கைகளை நாம் தாழ்மையையாய் பற்றிக்கொள்ளுதல் வேண்டும்!***

***1 கொரிந்தியர் 10:12-13: (NASB) '[12] இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். [13] மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்'.***

*நீங்கள் இவைகள் அனைத்திலும் சிக்கிவிட்டால் என்ன நடக்கும்? நீங்கள் கிறிஸ்துவ விசுவாசத்திற்கு மனந்திரும்ப விரும்புவீர்களேயானால், தேவன் தங்களை மீட்டுக்கொள்வார். நிவாரண சிகிச்சையினாலோ, அற்புதங்களினாலோ தனிப்பட்ட ஜெபத்தினாலோ அது நடைப்பெற போவதில்லை. தாழ்மையாய் தேவனிடத்திலும், கடின வேலை செய்ய தங்களுக்கு உதவும் மற்றவர்களிடத்திலோ தங்களை இழுத்துக்கொண்டு செல்லுதல் மூலமாய் மாத்திரமே இது நடைபெறும். தேவனுடைய கிருபையினால் நன்மையான விஷயங்கள் நடைபெறும்.*

***நீங்கள் பின்னடைவு அடைந்தால் என்ன செய்வது? மன்னிப்புக்காய் ஜெபித்து திரும்ப எழும்பி நில்லுங்கள்:***

***நீதிமொழிகள் 24:16 (NASB) 'நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்.'***

*ஆபாசவியலில் ஈடுபடுகையில் நாம் நீதிமானாய் இருப்பதில்லை. இது என் எண்ணத்திற்கான சுதந்திரம் என நாம் பிடிவாதமாக அவரை எதிர்த்து நிற்கலாம். ஆனால் நமது எண்ணத்திற்கான சுதந்தரத்தின் கிரைய விலை என்ன? தங்கள் திருப்திக்கான ஈடுகட்டல் என்ன? யார் இதனால் பாதிப்படைகின்றனர்? நீங்களும் உங்களை சுற்றியுள்ளோரும் தான். இது உங்களது உரிமையா? ஆம் நிச்சயமாக. தாங்கள் கிறிஸ்துவராய் இருக்கும் பட்சத்தில் இது தேவபக்தியாய் வாழும் வழியா? கொஞ்சம் கூட இல்லை!*

*ஆபாசவியலில் ஈடுபடுகையில் நாம் எதனை ஆதரிக்கிறோம்...?*

## என் கணினி சொடுக்குகள் (clicks) அடிமைத்தனத்தை ஆதரிக்கிறது (திருத்தப்பட்ட), தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், TEDxGreenville

- *ஆனால் என்னதான் நாம் உலகளவில் ஆபாசவியலை அடிப்படையாக கொண்ட கற்பழிப்பு கலாச்சாரத்தை எதிர்த்தாலும், அந்த ஆபாசவியலின் உற்பத்தியையும் பயன்படுத்துதலையும் நாம் ஆதரித்து ஏற்றுக்கொண்டு தான் இருக்கிறோம். வன்முறையான இணையதள பாலியலில் 42 மில்லியன் மக்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். மக்களை பணத்திற்காக விற்கும் பழக்கத்தில் இதின் பங்களிப்பு இருக்கிறது. இங்கே தாங்கள் பார்ப்பது போல, ஆபாசவியலின் சுழற்சியில், பொருளாக்கப்படுதல், பாலியல் கடத்தலை உள்ளடக்கிய கொள்ளப்பட்ட பாலியல் ஆகியன இருக்கின்றது. இந்த சுழற்சியில் எந்த பகுதியில் நீங்கள் பங்கெடுத்தாலும் நீங்கள் அதற்கு பங்களிப்பவராய் இருப்பீர்கள். ஆபாசப்படங்களை நாம் காணும்போது, அது பிறரை ஓர் பொருளாய் மாத்திரம் காண வற்புறுத்துகிறது, மேலும் அதை சும்மா காண்பதினால் மாத்திரம், நம் கணினி சொடுக்குகள் மூலமாய் மாத்திரம், அதின் தொழிலாளர்களுக்கான, பல்வேறு வகைக்கான தேவையை நாம் தூண்டி விடுகிறோம். ஆனால், பல பேர் அதனோடு மாத்திரம் நிற்பதில்லை. நம் கற்பனை நம்மை அதில் ஈடுபடுத்தி நான் தான் அதில் பங்குகொண்டு இருக்கின்றேன் என்று உணர வைக்கும். இது நம்மை பணம் கொடுத்து பாலியலில் ஈடுபட வைக்கும். அதற்கான இடங்கள் மசாஜ் பார்லர் போன்ற இடங்களாக இருக்கலாம். அங்கே பெண்களும் குழந்தைகளும் தரகர்கள் மற்றும் கடத்தல்காரர்களினால் மறைத்து வைக்கப்பட்டிருப்பார்கள். அங்கு யார் சுயாதீனத்தோடு வந்துள்ளனர் யார் வரவில்லை என்று பகுத்துப் பார்க்கும் சிந்தை நம்மால் தவிர்க்கப்படும். மேலும் அந்த சமயத்தில், அது ஒரு பொருட்டாக தோன்றாது. ஏனென்றால், நாம் பார்த்த ஆபாசப்படங்களில் அதில் ஈடுபடுவோர் அதை விரும்பி தான் செய்கின்றனர் என நம்மை நம்ப வைத்திருக்கிறது.*

*பாவிகள் இயேசுவை சூழ்ந்திருந்தபோது அவர் அவர்களை சுகப்படுத்தினார். நம்மை நாம் பாவமான ஆபாசவியலால் சூழச் செய்வோமேயானால், நாம் அதனை சுயநலத்திற்காகப் பயன்படுத்துவோம்.*

*நாம் உணர்வடைந்து, ஆபாசவியல் என்பது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு விரோதமாய் அநியாய செயல்களை ஏற்படுத்தும் என்பதை அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும். இதனால் அதற்கு எதிரான எண்ணங்களை நம் மனதில் அடிக்கடி கொண்டு வர வேண்டும். இதனை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்ப்போமாக! அது அழிவுகரமானதும் கொடூரமானதாயும் இருக்கிறது அல்லவா. இதனை தங்கள் முன் எப்போதும் வையுங்கள். நிச்சயமாக அதை தடுத்து நிறுத்துவதற்கு சிறிதளவு தூண்டுதலையாயினும் இது தங்களுக்கு கொடுக்கும். நண்பரோடு பேசுங்கள். உதவியை நாடுங்கள். ஜெபம் செய்யுங்கள். எங்கே தாங்கள் தேங்கி நின்றீர்களோ அங்கிருந்து முன்னேறுங்கள்.*

***1 தெசலோனிக்கேயர் 4:1-7 (NASB) '[1] அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். [2] கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. [3] நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, [4] தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், [5] உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து: [6] இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். [7] தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.'***

*நாம் உணர்வடைந்து இயேசுவின் பின்னடியாராய் இருப்பதினால் வரும் தெய்வீக சமாதானம் மற்றும் மனநிறைவுவையும் அடிக்கடி நினைவு கூருவோமாக.*

## உண்மைக் கூற்றுகளை அறிந்து கொள்ளுங்கள், தி போர்ன் பேரடாக்ஸ், மேகன் ஜான்சன், *TEDxGreenville*

- *லியோ டால்ஸ்டாய் கூறுவது என்னவெனில், 'உலகத்தை மாற்ற அனைவரும் எண்ணுகிறார்கள் ஆனால் தங்களை மாற்ற ஒருவரும் எண்ணுவதில்லை'. எல்லாருக்கும் அறிந்தவராய் எல்லாராலும் விரும்பப்பட்டவராய் இருக்க நினைக்கும் ஓர் தனிநபரான மனிதனை, நாம் மதிப்பிடும்போது, நடுநிலையாய் இருப்பதில்லை. ஒவ்வொரு ஆபாசப்பட தரவிறக்கமும், இயல்பாகவே நம் மரியாதைக்கு பாத்திரமாய் இருக்கும் யாரோ ஒருவரின் குழந்தையையோ, தாயையோ, சகோதரியையோ, சகோதரனையோ, நண்பனையோ, சக மனிதனையோ சுயநலத்திற்காய் பயன்படுத்துகிறோம். எப்போது ஓர் மனிதனை அவரின் அங்கங்களுக்கு தொடர்புபடுத்தி அவர்களின் மனித தன்மையின் மூன்றாம் பரிணாமத்தை புறந்தள்ளி சிந்திக்கிறோமோ, நாமும் பாலியல் அடிமைத்தனத்தை இயக்கும் அதே கலாச்சார மனப்பான்மையை கொண்டவர்களாய் இருப்போம். அரிஸ்டாட்டில் போல, நடைமுறை நிலைமை ஏற்றுக்கொண்டவர்களாய், இயல்பான சம்மந்தத்தை, புகையிலை நிறுவனங்களை போல நிராகரிப்போமேயானால், நாமும் 27 மில்லியன் மக்களின் அடிமைத்தனத்திற்கு பங்களிப்பவராய் இருப்போம்.*

***கலாத்தியர் 6:9: (NASB) 'நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.'***

*நாம் தேவபக்தியுடன் நீதியான முறையில் நன்மையை தொடர்ந்து செய்வோமேயானால், ஏற்றக்காலத்தில் நாம் அறுவடையை அறுப்போம். இந்த காரியங்களுக்கு எதிர்த்து நிற்க நாம் மனத்திண்மையும் திராணியுள்ளவர்களாய் இருக்க வேண்டும், இருப்போமேயானால், முழு மனசாட்சியுடன், 'கூடாது' என்கிற சுலபமான வார்த்தைக்கு பின்னாக இருந்து கொள்ள முடியும். "நான் அங்கே திரும்பவும் செல்லப்போவதில்லை, ஏனென்றால், அங்கே செல்வதினால், காயம், வலி, வேதனை, கேடு வழக்கமும், அழிவு வரவழைக்கும் அனைத்தும் கிட்டுகிறது." இது நமது வாழ்க்கைக்கு உகந்தது அல்ல.*

***'என்றைக்கும் அடிப்பணியாதேயுங்கள், என்றைக்கும் அடிப்பணியாதேயுங்கள், என்றென்றைக்கும் அடிப்பணியாதேயுங்கள்!' – வின்செண்ட் சர்ச்சில்***

*எனவே, ஆபாசவியல் மற்றும் மெய்நிகர் பாலியல் – தேவன் கவனிக்கின்றாரா?*

*ஜானத்தன், ரிக் மற்றும் கிறிஸ்துவ கேள்விகளுக்காய் ....*

*சிந்தியுங்கள்...!*

*மேலும் சிந்திக்க... CQ Rewind முழு பதிப்பில் உள்ளது!*

***'தொடர்ச்சியான சுய ஒழுக்கத்தாலும் சுய கட்டுபாட்டினாலும், உன்னதமான குணங்களை தாங்கள் வளர்த்திக் கொள்ள முடியும்' – க்ரென்வில் க்லைசர்***

***'மாபெரும் மனிதர்களின் வாழ்க்கையை படிக்கும்போது, அவர்கள் வென்ற முதல் வெற்றி தங்கள் சுயத்தை மேற்கொண்டது தான்... சுய ஒழுக்கமே அவர்கள் அனைவருக்கும் முதலில் வந்தது.' – ஹேறி ஸ் ட்ருமன்***

** ------- * ------- **

*கூடுதல் வேத வசனங்களும் மற்றும் சொற்பொருள் விளக்கங்களும்:*

***1 பேதுரு 1:13-16: (NASB) '13 ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். 14 நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, 15 உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். 16 நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.'***

*எபேசியர் 5:1-20: (NRSV) '1 ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப்
பின்பற்றுகிறவர்களாகி, 2 கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும்
பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். 3
மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும் <4202>, மற்றெந்த அசுத்தமும் <167>,
பொருளாசையுமாகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. 4 அப்படியே
வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். 5
விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய
ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. 6
இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால்,
ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; 7
அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். 8 முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ
கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். 9 ஆவியின்
கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். 10 கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று
நீங்கள் சோதித்துப்பாருங்கள். 11 கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக்
கடிந்துகொள்ளுங்கள். 12 அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும்
அவலட்சணமாயிருக்கிறதே. 13 அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால்
வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. 14 ஆதலால், தூங்குகிற நீ
விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று
சொல்லியிருக்கிறார். 15 ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல்,
ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, 16 நாட்கள் பொல்லாதவைகளானதால்
காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். 17 ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல்,
கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். 18 துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான
வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; 19 சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்
ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்
பாடிக் கீர்த்தனம்பண்ணி, 20 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும்
எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து'.*

*எபேசியர் 5:3 (NRSV) 'மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும் <4202>, மற்றெந்த அசுத்தமும் <167>, பொருளாசையுமாகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது.'*

**வேசித்தனம்:** *ஸ்டராங்ஸ் #4202 பரத்தைமை (விபச்சாரம் மற்றும் முறைதகாப் புணர்ச்சி உட்பட); அடையாளப்பூர்வமாக விக்கிரகாராதனை ஆகும். ஸ்டராங்ஸ் #4203 வேசியைப் போல் செயல்படுதல், அதாவது, தகாத காமத்தில் (இரு பாலினம் மீதும்) ஈடுபடுதல்*

**வேசி, விளைமகள்:** *ஸ்டராங்ஸ் #4204, #4205 இன் பெண்பால்; பெண் விபச்சாரி; அடையாளப்பூர்வமாக விக்கிரகாராதனைகாரர்.*

**விபச்சாரக்காரர், பரத்தைமையில் ஈடுபடுவோர்:** *ஸ்டராங்ஸ் #4205 (விற்க; 4097 ன் அடிப்படைக்கு ஒத்ததாக இருந்தது); (ஆண்) விபச்சாரக்காரர் (பணத்திற்கு விலைபோகும்), அதாவது (ஒப்புமையின் படி) பரத்தன் (காமுகன்)*

*#4202 யின் சில பயன்பாடு:*

*1 கொரிந்தியர் 6:13: (KJV) 'வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல <4202>, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்'.*

***1 கொரிந்தியர் 6:18: (KJV) 'வேசித்தனத்திற்கு <4202> விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்'.***

***விக்கிரகாராதனைகாரரர் என்கிற #4205 யின் பயன்பாடு:***

***எபிரெயர் 12:16: (KJV) 'ஒருவனும் வேசிக்கள்ளனாகவும் <4205>, ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்'.***
***மாசு:*** *ஸ்டராங்ஸ் #167; மாசு (தரத்தில்), சரீர ரீதியாகவோ ஒழுக்க ரீதியாகவோ: KJV – அசுத்தம்*

***சில பயன்பாடு:***

***ரோமர் 6:19: (KJV) 'உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் <167> அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்'.***

***2 கொரிந்தியர் 12:21: (KJV) 'மறுபடியும் நான் வருகிறபோது என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்தும்படிக்கு முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் <167> வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்கிறதைக்குறித்து, நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோவென்றும் பயந்திருக்கிறேன்'.***

***எபேசியர் 5:4: (NRSV) 'அப்படியே வம்பும் <150>, புத்தியீனமான பேச்சும் <151>, பரியாசமும் <2160> தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்'.***
***வம்பு (Obscene) :*** *ஸ்டராங்ஸ் #151 வெட்கக்கேடான, அதாவது, ஒழுக்கமீறல்; KJV – filthiness (அருவருப்பு)*

***ஒரே பயன்பாடு: (ஆங்கிலம்)***

***Ephesians 5:4: (KJV) 'Neither filthiness <151>, nor foolish talking, nor jesting, which are not convenient: but rather giving of thanks'.***

***புத்தியீனமான பேச்சும்:*** *ஸ்டராங்ஸ் #3473, புத்தியீனமான பேச்சு, அதாவது, கோமாளித்தனம் – முட்டாள் பேச்சு*

***பரியாசம்:*** *ஸ்டராங்ஸ் #2160, சாதுரிய பேச்சு, அதாவது (ஆபாச அர்த்தத்தில்) விளையாட்டாக பேசும் ஆபாச பேச்சு:- வேடிக்கை பேச்சு*

***கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். – 2 கொரிந்தியர் 13:14***

